செ. கு. எண்: 038 நாள் : 14.02.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 14.2.2014

4.1.2014 அன்று கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கீழகடியப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அல்லேசி என்பவரின் மகன் சூசை கடலில் சிப்பி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது கட்டுமரம் கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

18.1.2014 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்புக்கண்ணு என்பவரின் மகன் ராஜமாணிக்கம்;

20.1.2014 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிலம்பிமங்கலம் மதுரா, சாமியார்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. பக்கிரி என்பவரின் மகன் சுப்பராயன்;

-- ஆகியோர் கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்த மீனவர்கள் சூசை, ராஜமாணிக்கம் மற்றும் சுப்பராயன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9